**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR**

| | | |
|---|---|---|
| CC | : | 559 / 2024 |
| Deposition of Witness for | : | PW.1 (LW- 2 ) |
| Name | : | பாலசந்திரன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர் |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 20th day of January 2026.**

**முதல் விசாரணை:**

நான் கரூர் தேர் வீதியில் வசிக்கின்றேன். சுயமாக தொழில் செய்து வருகின்றேன். 06.05.2024–ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் நானும், எனது மகன் பாலமுருகன் என்பவரும் எங்கள் வீட்டை நோக்கி நெரூரிலிருந்து பஞ்சமாதேவி வழியாக வந்து கொண்டிருந்தபோது காளிபாளையம் என்ற இடத்தில் எங்களுக்கு முன்பாக TVS XL Heavy Duty TN 47 P 7531 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் எனக்கு தெரிந்த பிரபாகரன் என்பவர் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது எனக்கு பின்னாலிருந்து TN 47 BV 0384 என்ற பதிவெண் கொண் யமாகா வாகனம் என்னை அதிவேகமாக முந்திக்கொண்டு எனக்கு முன்பாக சென்று கொண்டிருந்த TVS வாகனத்தில் பின் பக்கமாக மோதி விபத்து ஏற்பட்டது. ஆஜர் எதிரிதான் யமாகா வாகனத்தை ஓட்டி சென்ற நபர் ஆவார். பிரபாகரன் என்பவர் கீழே விழுந்த பின்புதான்

அவரை நான் பார்த்து தெரிந்து கொண்டேன். பிரபாகரன் என்பவருக்கு தலை மற்றும் உடலில் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தது. உடனடியாக அங்கிருந்தவர்கள் துணையுடன் ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவழைத்து காயம்பட்ட பிரபாகரன் என்பவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். ஆனால் அவர் இறந்துவிட்டார். இந்த விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். விபத்தானது யமாகா வாகனத்தை அதி வேகமாக ஓட்டி வந்த எதிரியின் செயலால்தான் ஏற்பட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u> .

நான் வந்த இரு சக்கர வாகனம் TVS வாகனம் ஆகும். அதை நான் ஓட்டி வந்தேன். எனது மகன் பின்னால் அமர்ந்து வந்தார். எனக்கு முன்பு 10 அடி தொலைவில் விபத்து ஏற்பட்டது. பொது மக்கள் விபத்து ஏற்பட்ட பின்புதான் அங்கு வந்தார்கள். விபத்து ஏற்பட்ட சமயம் வேறு வாகனம் எதுவும் வரவில்லை. போலீஸ் விசாரணையில் நான் கரூரிலிருந்து நெரூர் சென்றபோது விபத்து ஏற்பட்டது என்று சொன்னேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை, நெரூரிலிருந்து கரூர் நோக்கி சென்றபோதுதான் விபத்து ஏற்பட்டதாக சொன்னேன்.

நான் யமாகா வாகனம் அதிவேகமாக சென்றதாக யூகத்தின் அடிப்படையில் சொல்லவில்லை. யமாகா வாகனத்தை ஓட்டி வந்த எதிரிக்கும் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். பிரபாகரன் என்பவரை மருத்துவமனைக்கு நான் அழைத்து செல்லவில்லை. சம்பவம் குறித்து அவரது மனைவிக்கு தகவல் தெரிவித்தேன். மறுநாள் காலைதான் மருத்துவமனை சென்றேன். எதிரி கவனமாகத்தான் இரு சக்கர வாகனத்தை ஓட்டினார் என்றால் சரியல்ல. எதிரி அதிவேகமாக வாகனத்தை ஓட்டவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன பிரபாகரன் என்பவர் எந்த சமிக்கையும் செய்யாமல் திடீரென்று வலது பக்கமாக திரும்பியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR**

| | | |
|---|---|---|
| CC | : | 559 / 2024 |
| Deposition of Witness for | : | PW.3 (LW- 9 ) |
| Name | : | வினோத்குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர் |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 20th day of January 2026.**

**முதல் விசாரணை:**

நான் கரூர் பழைய கடைவீதியில் வசிக்கின்றேன். நான் சுயதொழில்செய்து வருகின்றேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். 07.05.2024-ம் தேதி கரூரிலிருந்து பஞ்சமாதேவி செல்லும் வழியில் காளிபாளையம் என்ற இடத்தில் உள்ள சாலையில் காலை 8.00 மணியளவில் நான் சென்றபோது வெங்கமேடு காவல்நிலையத்தை சேர்ந்த போலீசார் முதல் நாள் நடைபெற்ற விபத்து குறித்த இடத்தை பார்வையிட்டு மகஜர் தயார் செய்தார்கள். அதில் என்னை கையொப்பம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். என்னுடன் நிமலேஷ் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.1** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>** .

இறந்து போன பிரபாகரன் என்பவர் எனக்கு தெரிந்த நபர். நான் சென்றபோது சுமார் 10 நபர்கள் அங்கு இருந்தார்கள். அனைவரிடமும் சாட்சியாக இருக்குமாறு போலீசார் கேட்டார்கள். அவர்கள் சம்மதித்தார்கள் இருந்தாலும் நானும், நிமமேஷ் என்பவரிடம்தான் சாட்சியாக கையொப்பம் வாங்கினார்கள். நான் கையெழுத்து செய்த மகஜரில் போலீசார் வரைபடம் தயார் செய்த விவரங்களை எழுதியிருந்தார்கள். நான் சொல்வதுபோல் சம்பவ இடத்திற்கு நானும், நிமமேஷ் என்பவரும் செல்லவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.